**தமிழ்நாடு அரசு**

**பொது (பொது.1)த் துறை**
**தலைமைச்செயலகம், சென்னை–9**

## விளம்பரம்

துணிவு மற்றும் வீர சாகசச் செயல்களுக்கான ‘‘கல்பனா சாவ்லா விருது’’ ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், சுதந்திரதின விழாவின் போது வழங்கப்படுகிறது. ரூ.5.00 (ஐந்து) இலட்சத்திற்கான காசோலையும் மற்றும் ஒரு பதக்கமும் இந்த விருதில் அடங்கும். துணிச்சலான மற்றும் வீர சாகசச் செயல் புரிந்த தமிழகத்தைச் சேர்ந்த பெண் விண்ணப்பதாரர் மட்டுமே இவ்விருதினைப் பெற தகுதியுள்ளவர்.

2. 2013–ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள விருதிற்கான விண்ணப்பங்கள், விரிவான தன்விவரக் குறிப்பு, உரிய விவரங்கள் மற்றும் அதற்குரிய ஆவணங்களுடன் அரசு முதன்மைச்செயலாளர், பொதுத்துறை, தலைமைச்செயலகம், சென்னை–600009 அவர்களுக்கு 30.06.2013–க்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விருது பெறத் தகுதியுள்ளவர், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்படுவர்.

யத்தீந்திர நாத் ஸ்வேன்,
அரசு முதன்மைச் செயலாளர்